செய்தி வெளியீடு எண்:566 நாள்:18.10.2013

## செய்தி வெளியீடு

கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய இரண்டும் மாணவர்களின் பன்முக வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். கல்வி அவர்களின் அறிவை வளர்க்கும். விளையாட்டு அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை அளிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு, கல்வியைப் போலவே, பள்ளி மாணவர்களிடையே விளையாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்து, விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது, பள்ளிகளில் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது, தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் மாணவ மாணவியர்களிடையே உள்ள ஆர்வத்தினை அதிகரிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதன்முறையாக குறுவட்ட அளவிலான போட்டிகளை நடத்துவதற்காக 2 கோடியே 64 லட்சத்து 9 ஆயிரத்து 300 ரூபாய், கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்துவதற்காக 79 லட்சத்து 83 ஆயிரத்து 50 ரூபாயும், மண்டல அளவிலான பழைய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக 1 கோடியே 29 லட்சத்து 65 ஆயிரத்து 250 ரூபாயும், மண்டல அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக 1 கோடியே 45 லட்சத்து 23 ஆயிரம் ரூபாயும், மாநில அளவிலான குடியரசு தின/பாரதியார் தின குழுப் போட்டிகளை நடத்துவதற்காக 94 லட்சத்து 33 ஆயிரத்து 700 ரூபாயும், மாநில அளவிலான குடியரசு தின தடகள போட்டிகளை நடத்துவதற்காக 26 லட்சத்து 17 ஆயிரத்து 10 ரூபாயும், பாரதியார் தின மற்றும் குடியரசு தின புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக 81 லட்சத்து 13 ஆயிரத்து 650 ரூபாயும், இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமம் நடத்தும் தேசிய அளவிலான போட்டிகளுக்கான தெரிவுப் போட்டிகள், தேசிய/சர்வதேச போட்டிகளில் பங்கேற்றல் மற்றும் தேசிய போட்டிகளை நடத்துவதற்காக 1 கோடியே 79 லட்சத்து 55 ஆயிரத்து 40 ரூபாயும் ஆக மொத்தம் 10 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் தமிழகத்தில் இருந்து அதிக அளவில் மாணவ, மாணவியர் பங்கு பெற வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 18.10.2013.